# ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, தமிழ்நாடு

| | |
|---|---|
| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| **திரு. இரா.சுதன், இ.ஆ.ப** | **அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்,** |
| **மாநில திட்ட இயக்குநர்** | **ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி** |
| ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி | அனைத்து மாவட்டங்கள் |
| சென்னை -6 | |

**ந.க.எண். 2869/ஆ11/சிறப்புப் பயிற்சி/ஒபக/2022, நாள்: .07.2022**

**அய்யா/அம்மையீர்,**

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - தமிழ்நாடு பள்ளி செல்லா/இடைநின்ற குழந்தைகளுக்கான சிறப்புப் பயிற்சி தலையீடுகள் சிறப்பு தேவைகள் கொண்ட குழந்தைகள் மற்றும் புலம் பெயர் தொழிலாளர்களின் குழந்தைகள் உட்பட பள்ளி செல்லா/இடைநின்ற குழந்தைகளை அடையாளம் காணுதல், பள்ளியில் சேர்த்தல் மற்றும் தக்கவைத்தல் - 2022-23 ஆண்டுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் செயல்பாட்டுத் திட்டம் வழங்குதல் - சார்ந்து.

**பார்வை:** அரசுக் கடிதம் (MS) எண். 10, பள்ளிக் கல்வி (SSA2) துறை, நாள் 11.01.2011

*****

1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையில் 100% மாணவர் சேர்க்கையை உறுதிப்படுத்துவதற்கான செயல்பாடு, தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் முக்கியமான உட்கூறுகளில் ஒன்றான பள்ளி செல்லா/இடைநின்ற குழந்தைகளுக்கான சிறப்புப் பயிற்சி தலையீடுகள் ஆகும்.

100% மாணவர் சேர்க்கையை அடைவதற்கு நவீன தொழில்நுட்ப உதவியுடன் கைப்பேசி செயலியும், இணைய பயன்பாடும் உறுதுணை புரிகிறது. மேலும் அரசு அலுவலர்கள், கல்வியாளர்கள் மற்றும் அரசின் சிறப்புத் திட்டமான இல்லம் தேடிக் கல்வியின் தன்னார்வலர்கள் ஆகியோருடன் இணைந்து பல்வேறு தலையீட்டு செயல்பாடுகள் ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 1. பெருந்தொற்றுக்கு முந்தைய அணுகுமுறை (2020-21 ஆம் கல்வியாண்டு வரை)

சிறப்பு தேவைகள் கொண்ட குழந்தைகள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகள் உட்பட பள்ளி செல்லா/இடைநின்ற குழந்தைகளை கண்டறிய, 2020-21ஆம் கல்வியாண்டு வரை (1) ஏப்ரல் &மே (2) அக்டோபர் மற்றும் (3) ஜனவரி என மூன்று கட்டங்களாக பள்ளிக் கல்வித் துறை வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்பு நடத்தியது.

அச்சிடப்பட்ட மாதிரி கேள்விகளைக் கொண்டு இக்கணக்கெடுப்பு நடத்தப்பட்டு மாநில அளவில் தரவுகள் தொகுக்கப்பட்டன.

சுமார் 30,000 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்கள் மீண்டும் அருகாமைப் பள்ளிகளில் அவரவர் வயதுக்கேற்ப வகுப்புகளில் சேர்க்கப்பட்டனர். ஆதரவு தேவைப்படும் குழந்தைகளுக்கு உண்டு உறைவிட சிறப்புப் பயிற்சி மையங்கள் மூலமாகவும், இணைசிறப்புப் பயிற்சி மையங்கள் மூலமாகவும் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டது

2. **பெருந்தொற்றுக்குப் பிந்தைய அணுகுமுறை (2021-22 கல்வியாண்டுக்காக)**

2021-22 கல்வியாண்டில், பெருந்தொற்றுக்குப் பிந்தைய செயல்பாடாக, ஆசிரியர் பயிற்றுநர்கள், ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்கள் மூலமாக வீடு வீடாகக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. கணக்கெடுப்பின் அத்தனை தரவுகளையும் உள்ளீடு செய்யும் வகையில் ஒரு கைப்பேசி செயலி (Mobile App) முதன்முறையாக வடிவமைக்கப்பட்டது. இடைநிற்றலுக்கான காரணங்கள் அடிப்படையில், பள்ளியில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் (To be admitted), மீண்டும் சேர்க்கத் தேவையில்லா மாணவர்கள் (Non-Target students) என இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு அவை ஒரு பொதுத் தரவு தளத்தில் (Common Pool Data) வைக்கப்பட்டன.

**பொதுத் தரவு தள விவரங்கள் (Common Pool Data)**: பள்ளி செல்லும் வயதில் பள்ளிக்குச் செல்லாத அனைத்து குழந்தைகள் குறித்த விவரங்கள் அடங்கிய தரவுத்தளம்

(1) **பள்ளியில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் (To be admitted)**: இடம்பெயர்தல், பொருளாதாரச் சூழல், குடும்பச் சூழல் போன்றவை காரணமாக பள்ளி செல்ல இயலாத குழந்தைகள்.

(2) **பள்ளியில் மீண்டும் சேர்க்கத் தேவையில்லா மாணவர்கள் (Non-Target students)**: ஐடிஐ, பாலிடெக்னிக் போன்றவற்றில் இணைந்து தொடர்ந்து கல்வி பயிலும் - போன்ற காரணங்களால் பள்ளியில் மீண்டும் சேர்ப்பதற்கு பள்ளி செல்லா/இடைநிற்ற குழந்தைகளுக்கான பள்ளிக் கல்வித் துறையின் எந்த தலையீடு முயற்சியும் தேவையில்லாதவர்கள்.

கணக்கெடுப்பில் மொத்தம் **5,33,447 மாணவர்கள் கண்டறியப்பட்டனர்**. இதில் மாநிலம் முழுவதும் பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டு, **1,90,008 மாணவர்கள்** மீண்டும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். **3,26,779 மாணவர்கள்** மீண்டும் பள்ளிகளில் சேர்க்கத் தேவையில்லா மாணவர்கள் என்றும் கண்டறியப்பட்டனர். **16,660 மாணவர்கள்** இன்னும் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் என அடையாளம் காணப்பட்டு, இந்தப் பட்டியல் மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் மாவட்ட ஆட்சியர்களுக்குப் பகிரப்பட்டது. மாவட்ட ஆட்சியர்களின் இணையதளங்களில் "பள்ளியில் மீண்டும் சேர்க்கப்பட வேண்டிய மாணவர்கள்" பட்டியல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

3. **தற்போதைய அணுகுமுறை - 2022-23 கல்வியாண்டில் இருந்து பின்பற்றப்பட வேண்டிய அணுகுமுறை**

சென்ற கல்வி ஆண்டில், தொழில்நுட்பமும், தரவுகளும், களப்பணிகளும் மேற்கொண்டதன் வழியாக கிடைக்கப்பெற்ற அனுபவங்களிலிருந்து இந்த கல்வியாண்டிற்கான (2022-23) உத்திகளில் சில மாற்றங்கள் திட்டமிடப்பட்டிருக்கின்றன. அவை:

## I. நீண்ட நாட்கள் பள்ளிக்கு வராத மாணவர்களை இடைநிற்றலுக்கு வாய்ப்புள்ளதாக கருதி தானாகவே கண்டறியும் வழி

கணக்கெடுப்பு செயலியில் கீழ்கண்ட நிரல்களில் தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன:

பள்ளிகளில் சேர்ந்த மாணவர்கள்,

1. ஒரு வாரத்தில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை என்றால், அம்மாணவர்களின் விவரப்பட்டியல் தலைமையாசிரியரின் EMIS தளத்தில் காண்பிக்கப்படும். தலைமையாசிரியர் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
2. இரண்டு வாரத்தில் ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை என்றால், வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநரின் EMIS தளத்தில் அம்மாணவர்களின் விவரப்பட்டியல் காண்பிக்கப்படும். ஆசிரியர் பயிற்றுநர் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
3. மூன்று வாரத்தில் ஒன்பது அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை என்றால், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களின் EMIS தளத்தில் அம்மாணவர்களின் விவரப்பட்டியல் காண்பிக்கப்படும். மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
4. நான்கு வாரத்திற்கு பிறகும் தொடர்ந்து மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை என்றால், இடைநிற்றலுக்கு வாய்ப்புள்ளவர்கள்(Potential Drop-out) என அவர்களைக் கருதி, தலைமையயாசிரியர்பொதுத் தரவு தளப் பட்டியலில் (Common Pool Data) அம்மாணவர்களை காரணத்தை குறிப்பிட்டு சேர்க்க வேண்டும்.

## II. மீளாய்வு செய்வதற்கும் மற்றும் குழந்தைகளை தொடர்ந்து கண்காணிப்பதற்கும் வகைப்படுத்தப்பட்ட பொதுத் தரவு தளம் (Common Pool Data) விவரங்கள்

பள்ளி செல்லும் வயதுள்ள அத்தனை குழந்தைகளும் பள்ளிகளில் சேர்க்கப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்கான ஒரு முக்கிய தகவல் களஞ்சியமாக பொதுத் தரவு தளம் விளங்கும்.

பொதுத் தரவுத் தளத்தில்,

1. இடைநிற்றலுக்கு வாய்ப்புள்ள (Potential Drop-out) மாணவர்கள் பகுதியிலிருக்கும் தரவுகள்.
2. பள்ளி மேம்பாட்டுத் திட்டச் செயலியில் பள்ளி மேலாண்மைக் குழு மூலம் பெறப்பட்ட தரவுகள்.
3. கள அளவிலான கணக்கெடுப்பாளர்களிடம் (BRTE, ஆசிரியர்கள், சிறப்புப் பயிற்றுநர்கள்) இருந்து பெறப்பட்ட தரவுகள்.

பொதுத் தரவுத் தளத்திலுள்ளவைகள் 2 வகைகளாக பிரிக்கப்பட்டு அதன் கீழ் 5 உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

**i. பள்ளியில்சேர்க்கப்படவேண்டியவர்கள்:**

- நான்கு வாரத்திற்கு பிறகும் தொடர்ந்து மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை என்றால், இடைநிற்றலுக்கு வாய்ப்புள்ளவர்கள் (Potential Drop-out) என அவர்களைக் கருதி, தலைமையாசிரியர் பொதுத் தரவு தளப் பட்டியலில் சேர்க்கும் மாணவர்கள்.
- வேறு வட்டாரங்களுக்கு, மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்த குழந்தைகள் , பள்ளிகளில் இதுவரை சேராத குழந்தைகள்
- ஐடிஐ, பாலிடெக்னிக், டுட்டோரியல் போன்றவற்றில் சேர்ந்திருக்கும் குழந்தைகள் (விவரங்கள் சரிபார்க்கப்பட்டு, அவர்கள் பள்ளியில் மீண்டும் சேர்க்கத் தேவையில்லா மாணவர்கள்என்கிற பிரிவிற்கு நகர்த்தப்படுவார்கள்)
- வேறு மாநிலங்களுக்கு, நாடுகளுக்கு இடம் பெயர்ந்தவர்கள் (விவரங்கள் சரிபார்க்கப்பட்டு, அவர்கள் பள்ளியில் மீண்டும் சேர்க்கத் தேவையில்லா மாணவர்கள் என்கிற பிரிவிற்கு நகர்த்தப்படுவார்கள்)

**ii. பள்ளியில் மீண்டும் சேர்க்கத் தேவையில்லா மாணவர்கள்:**

- 12 ஆம் வகுப்பு முடித்தவர்கள், அதிக வயதை எட்டியவர்கள் (18+ வயதுக்கு மேற்பட்டவர்கள்), ஒரு முறைக்கு மேல் பதிவு செய்யப்பட்டவர்கள், மரணமடைந்துவிட்ட குழந்தைகள் போன்றவர்கள் இவ்வாறு வகைப்படுத்தப்பட்ட பொதுத் தரவு தளம் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் முதன்மை கல்வி அலுவலர்களின் இணைய முகப்புப் பக்கத்தில் (Dashboard) காண்பிக்கப்படும்.

## III. பள்ளி செல்லா/இடைநின்ற குழந்தைகள் கணக்கெடுப்பு முறை

பள்ளிசெல்லா/ இடைநின்ற குழுந்தைகள் கணக்கெடுப்பு செயலியில் வகைப்படுத்தப்பட்ட பொதுத் தரவு தள விவரங்கள் காணப்படும்.

ஒரு குழந்தை கண்டறியப்பட்டவுடன்

1. கணக்கெடுப்பாளர், அக்குழந்தையை கொடுக்கப்பட்டிருக்கும் பட்டியலில் உள்ள காரணங்களுள் (**இணைப்பு -1**) ஒன்றோடு பொருத்தி இணைக்க வேண்டும்.
2. கண்டறியப்பட்ட காரணங்களின் அடிப்படையில், அந்த மாணவரின் பெயர் 'பள்ளியில் மீண்டும் சேர்க்கத் தேவையில்லாத மாணவர்கள்' அல்லது 'பள்ளியில் சேர்க்கப்பட வேண்டியவர்கள்' பட்டியலுக்குள் நகர்த்தப்படும்.
3. 'பள்ளியில் சேர்க்கப்படவேண்டியவர்கள்' பட்டியலில் உள்ள குழந்தைகளுக்குத் தேவையான உதவிகள் ஆவணத்தில் காணப்படுவது போல் (**இணைப்பு -1**) சம்பந்தப்பட்ட துறையின் மூலம்கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும்.
4. பள்ளியில் மீண்டும் சேர்க்கத் தேவையில்லாத மாணவர்கள் விவரங்கள் 3 வழிமுறைகளில் சரிபார்க்கப்படும்.
   i. பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மூலம்
   ii. கல்வி நிறுவனங்கள் மூலம் ( DOTE, DET)
   iii. செயல் திட்ட வழி முறையில் உள்ளது போல மாவட்ட EMIS ஒருங்கிணைப்பாளர் மூலம்.

a) **"பள்ளியில் சேர்க்கப்படவேண்டியவர்கள்" தொடர்பாக**

தேவையான துறைசார் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு **இணைப்பு-1ல்** காணப்படும் தொடர்புடைய துறைகளுக்கு அறிக்கை அனுப்பப்படும். நடவடிக்கை எடுக்கப்பட்ட தரவுகள் பற்றிய விவரங்கள் முதலமைச்சரின் இணையதள முகப்புப் பக்கத்தில் பிரதிபலிக்கப்பட்டு, மீளாய்வு செய்யப்படும்.

b) **"மீண்டும் சேர்க்கத் தேவையில்லா மாணவர்கள்" தொடர்பாக**

**வகை 1: ஐடிஐ, பாலிடெக்னிக்,தொழிற்கல்வி பயிற்சி நிறுவனங்கள் அல்லது டுட்டோரியலில் படிக்கும் மாணவர்கள்**

1. பள்ளி செல்லா/ இடைநின்ற குழந்தைகள் கணக்கெடுப்பு செயலியில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஐடிஐ-க்கள், பாலிடெக்னிக்குகள், தொழிற்கல்வி பயிற்சி நிறுவனங்கள் மற்றும் டுட்டோரியல்கள் விவரங்கள் அனைத்தும் இணைக்கப்படும்
2. அனைத்து ஐடிஐக்கள், பாலிடெக்னிக்குகளும் தங்கள் நிறுவனத்தில் மாணவர்களைச் சேர்க்கும் போது அவர்களின் EMIS எண்ணும் கண்டிப்பாக பதிவு செய்யப்படும். ஒரு மாணவர் ஐடிஐ அல்லது பாலிடெக்னிக் அல்லது தொழிற்கல்வி நிறுவனங்களில் சேர்ந்திருப்பதாக கணக்கெடுப்பாளர் கண்டுபிடித்தால், அம்மாணவரின் EMIS எண் DoTE& DETல் உள்ள EMIS எண்ணோடு பொருந்துகிறதா என சரிபார்க்கப்படும்.

3. அரசு தேர்வுகள் இயக்ககத்தோடு இணைந்து, பத்தாம் வகுப்பு தேர்வெழுதும் அனைத்து தனியார் மாணவர்களின் EMISஎண்கண்டறியப்பட்டு, அவர்களின் பெயர், டுட்டோரியல்/ டியூஷன் மையத்தின் பெயர்கள் ஆகியவையும் பெறப்பட்டு, அந்த மாணவர்கள் "மீண்டும் சேர்க்கத் தேவையில்லா மாணவர்கள்" என வகைப்படுத்தப்பட்டு தனியார் டுட்டோரியல்/டியூஷன் மையங்களில் படிப்பவர்கள் என்ற காரணத்தின் கீழ் பட்டியலிடப்படும்.

**வகை 2: ஒருமுறைக்கு மேல் சேர்க்கைப் பதிவு இருந்தால்**

மாவட்ட EMIS ஒருங்கிணைப்பாளர், மாநில EMIS குழுவுடன் கலந்தாலோசித்து கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும்:

1. ஒரு முறைக்கு மேல் சேர்க்கப்பட்ட மாணவர்கள் என கண்டறியப்பட்ட பெயர்களை, EMIS தளத்தில் உள்ள தரவுகளுடன் சரிபார்க்க வேண்டும்.
2. ஒரு முறைக்கு மேல் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உறுதியானால், ஒரு முறைக்கு மேல் அவர்களை சேர்த்ததை EMIS-ல்இருந்து "நீக்கப்பட வேண்டியவை" என்ற பட்டியலில் வைக்க வேண்டும்.

**வகை 3: மாணவர்ஒருவேளை மரணமடைந்திருந்தால்**

1. பொதுத் தரவு தளத்தில் (Common Pool Data) கணக்கெடுப்பின் போது, 'இறப்புச் சான்றிதழை' பதிவேற்றம் செய்யும் வசதி கணக்கெடுப்பாளர்களுக்கு வழங்கப்படும்.
2. பள்ளியின் தலைமையாசிரியர் மாணவரின் இறப்புச் சான்றிதழை அதிகாரப்பூர்வமாக பதிவேற்றம் செய்யும் வசதி வழங்கப்படும்.
3. இறந்துவிட்டதாக அதிகாரப்பூர்வமாக தெரிந்துவிட்ட பின்னர், பொதுத் தரவு தளத்திற்குள்ளேயே ஒரு தனி பிரிவுக்குள் அவர்கள் பெயர்கள் பட்டியலிடப்படும். இதிலுள்ள மாணவர்கள் அதன் பின்மீளாய்விற்கு உட்படுத்தப்பட மாட்டார்கள்.

**வகை 4: வேறு மாநிலங்களுக்கு/நாடுகளுக்கு புலம்பெயர்ந்திருந்தால்**

1. மாணவர்கள் வேறு மாநிலங்களுக்கு/நாடுகளுக்கு புலம் பெயர்ந்திருப்பது கண்டறியப்பட்டால் பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும். இதற்கான வசதி பள்ளி மேலாண்மைக் குழுக்கான செயலியில் ஏற்படுத்தப்படும்.
2. முதலில் இந்த மாணவர்கள் "பள்ளியில் சேர்க்கப்பட வேண்டியவர்கள்" என்கிற பிரிவில் இணைக்கப்படுவார்கள். பள்ளி மேலாண்மைக் குழுவால் சரிபார்க்கப்பட்டு, சரி என்று உறுதி செய்த பின் அவர்கள் "பள்ளியில் மீண்டும் சேர்க்கத் தேவையில்லா மாணவர்கள்" பட்டியலில் இணைக்கப்படுவர்.
3. இந்த தரவு, பொதுத் தரவு தளத்திற்குள்ளேயே தனி பிரிவாக உருவாக்கப்பட்டு, அவர்கள் இதற்குப் பிறகு எந்தவித மீளாய்விற்கும் உட்படுத்தப்பட மாட்டார்கள்.

**மீளாய்வு வழிமுறை**

| அளவு | மீளாய்வின் நோக்கம் | பங்கேற்பாளர்கள் | கால இடைவெளி |
|---|---|---|---|
| மாநிலம் | (a) இந்த உட்கூறின் தலையீடுகளின் முன்னேற்றத்தைப் புரிந்துகொள்வது. முக்கிய சவால்களை அடையாளம் காண்பது மற்றும் தீர்வுகளை ஆலோசனை செய்வது<br>(b) மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு முறையாக வழிகாட்டி. அவர்கள் தங்களை முற்றிலுமாக அர்ப்பணிக்கும் படிச் செய்தல்<br>(c) தங்கள் வெற்றிக் கதைகளை/நடைமுறை தலையீடு முயற்சிகளை பகிர்ந்து கொள்ள மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு ஒரு தளத்தை உருவாக்கித் தருவது | மாவட்ட சிறப்புப் பயிற்சி மற்றும் EMIS ஒருங்கிணைப்பாளர்கள் | வாரம் ஒரு முறை |
| மாவட்டம் | (a) மாநிலக் குழுவிலிருந்து வரும் தகவல்களையும் உத்திகளையும் வழிகாட்டுதல்களையும் தங்கள் மாவட்ட ஆசிரியர் பயிற்றுநர்களிடம் பகிர்வது<br>(b) இந்தக் கணக்கெடுப்பு மற்றும் வழிமுறையில் இருக்கும் தொழில்நுட்ப அம்சங்கள் தொடர்பாக வரக்கூடிய சவால்களை கண்டறிவது<br>(c) சிறப்பு பயிற்சி தலையீட்டு முயற்சிகளில் உடனுக்குடன் உதவி செய்வது | வட்டாரக் கல்வி அலுவலர்கள் / வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் | வாரம் ஒரு முறை |
| வட்டாரம் | (a) மாவட்டங்களிலிருந்து வரும் உத்திகள்சார்ந்த ஆலோசனைகளை களப்பணியில் இருக்கும் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட கணக்கெடுப்பாளர்களிடம் பகிர்ந்து உறுதுணை புரிவது | வட்டாரத்திலுள்ள அனைத்து தலைமையாசிரியர்களும் | வாரம் ஒரு முறை |

**செயல்திட்ட வழிமுறைகள்**:

பள்ளி செல்லாக் குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்டுள்ள புதிய அணுகுமுறைகளுக்கான செயல்திட்ட வழிமுறைகள் கால வரையறையுடன் கீழே விளக்கப்பட்டுள்ளது.

# செயல்திட்ட வழிமுறைகள்



செயல்பாடுகளுக்கான கால அட்டவணை 2022-23

ஜூன் – ஜூலை 2022:

- 100% மாணவர் சேர்க்கைக்காக, குறிப்பாக 5+ வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை பள்ளியில் சேர்க்க தனிக் கவனம் மேற்கொள்வது.
- 5, 8, 10ஆம் வகுப்பு பயின்ற மாணவர்கள் அனைவரும் அடுத்த வகுப்பில் சேர்க்கப்பட்டுவிட்டதை உறுதிப்படுத்துவதன் மூலம் இடைநிற்றலை தவிர்ப்பது.

ஆகஸ்ட் – செப்டம்பர் 2022:

- 100% மாணவர் சேர்க்கைக்காக, குறிப்பாக 5+ வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை பள்ளியில் சேர்க்க தனிக் கவனம் மேற்கொள்வது தொடரும்.
- 5, 8, 10ஆம் வகுப்பு பயின்ற மாணவர்கள் அனைவரும் அடுத்த வகுப்பில் சேர்க்கப்பட்டுவிட்டதை உறுதிப்படுத்துவது.
- பள்ளி செல்லா/இடைநின்ற குழந்தைகள் கணக்கெடுப்பு செயலியின் மூலம் தொடக்கம்.
- ஆசிரியர்கள், வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள், சிறப்பாசிரியர்கள், தன்னார்வலர்கள் உட்பட அனைத்து கணக்கெடுப்பாளர்களும் பொதுத் தரவு தளத்தில் உள்ள அனைத்து மாணவர்களையும் கண்டறிந்து, அவர்களின் வயதுக்கு ஏற்ற வகுப்புகளில் அருகாமையிலுள்ள பள்ளிகளில் சேர்க்க வேண்டும்.
- பள்ளியில் மீண்டும் சேர்க்கப்பட்ட குழந்தைகளுக்குத் தேவையான அனைத்து பொருட்களை வழங்குதல் மற்றும் பல்வேறு நலத்திட்டங்கள் மூலமாக வழங்கப்படுகின்ற அனைத்து பொருள்களும் குழந்தைகளுக்கு பள்ளி நிர்வாகம் மூலம் வழங்குதலை உறுதிப்படுத்த வேண்டும்.
- பள்ளியில் மீண்டும் சேர்க்க தேவையில்லாத மாணவர்கள் என கள ஆய்வு மூலம் கண்டறியப்பட்டவர்கள் DOTE, DET, DGE போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட விவரங்களைக் கொண்டு அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- சம்பாதிக்க வேண்டிய கட்டாயம், பள்ளிக் கட்டணம் கட்டாதது, உடல் நலப் பிரச்சனைகள், சிறப்பு தேவைகள் கொண்ட குழந்தைகள், குழந்தைத் திருமணம், இடம் பெயர்ந்து வேறு மாவட்டங்களுக்கு, மாநிலங்களுக்கு, நாடுகளுக்குச் சென்றது, கண்டுபிடிக்க இயலவில்லை அல்லது தொடர்பு கொள்ள முடியவில்லை போன்ற அனைத்து காரணங்களால் இடைநின்ற குழந்தைகளை மீண்டும் பள்ளியில் சேர்க்க சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- இக்கல்வியாண்டில் பள்ளி செல்லா மற்றும் இடைநின்ற குழந்தைகளுக்கான சிறப்பு பயிற்சி செயல்பாடுகள் இவ்வலுவலகத்திலிருந்து 06.07.2022 அன்று வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படி தொடங்கப்பட வேண்டும்.

அக்டோபர் 2022:

- சம்பாதிக்க வேண்டிய கட்டாயம், பள்ளிக் கட்டணம் கட்டாதது, உடல் நலப் பிரச்சனைகள், சிறப்பு தேவைகள் கொண்ட குழந்தைகள், குழந்தைத் திருமணம், இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களுக்கு, மாநிலங்களுக்கு, நாடுகளுக்குச் சென்றது, கண்டுபிடிக்க இயலவில்லை அல்லது தொடர்புகொள்ள முடியவில்லை போன்ற அனைத்து காரணங்களால் இடைநின்ற குழந்தைகளை மீண்டும் பள்ளியில் சேர்க்க சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளுவது தொடரும். இடைநின்றவர்களின் பட்டியலில் ஒருவர் கூட இல்லாத வரை, இம் முயற்சி தொடரும்.
- பள்ளியில் மீண்டும் சேர்க்கப்பட்ட குழந்தைகள் தங்களை பள்ளி சூழலில் தகவமைத்துக் கொண்டுள்ளதை கண்டறிய தேவையான வழிமுறைகள் உருவாக்கப்படும்.

நவம்பர் 2022:

- சம்பாதிக்க வேண்டிய கட்டாயம், பள்ளிக் கட்டணம் கட்டாதது,உடல்நலப் பிரச்சனைகள், சிறப்பு தேவைகள் கொண்ட குழந்தைகள், குழந்தைத் திருமணம், இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களுக்கு, மாநிலங்களுக்கு, நாடுகளுக்குச் சென்றது, கண்டுபிடிக்க இயலவில்லை அல்லதுதொடர்புகொள்ள முடியவில்லை போன்ற அனைத்து காரணங்களால் இடைநின்ற குழந்தைகளை மீண்டும் பள்ளியில் சேர்க்க சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளுவது தொடரும். இடைநின்றவர்களின் பட்டியலில் ஒருவர் கூட இல்லாத வரை, இம் முயற்சி தொடரும்.
- பொதுத் தேர்வு எழுதாதவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் 10, 11, 12ஆம் வகுப்பு மாணவர்களில் நீண்ட நாட்கள் பள்ளிக்கு வராதவர்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்தப்படும்

டிசம்பர் 2022:

- பொதுத் தேர்வு எழுதாதவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் 10, 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களில் நீண்ட நாட்கள் பள்ளிக்கு வராதவர்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

ஜனவரி 2023:

- பொதுத் தேர்வு எழுதாதவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் 10, 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களில் நீண்ட நாட்கள் பள்ளிக்கு வராதவர்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.
- பருவக்கால இடம்பெயரும் நாடோடிக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

பிப்ரவரி 2023:

- மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்/ முதன்மை கல்வி அலுவலர்கள் துணையுடன் வேறு மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்து சென்ற மாணவர்களை அடையாளம் கண்டு சிறப்பு கவனம் செலுத்தவேண்டும்.

**மார்ச் 2023:**

- மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்/ முதன்மை கல்வி அலுவலர்கள் துணையுடன் வேறு மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்து சென்ற மாணவர்களை அடையாளம் கண்டு சிறப்புக் கவனம் செலுத்துவதைத் தொடர வேண்டும்.

**ஏப்ரல் 2023:**

- இந்த ஆண்டு முழுவதும் பள்ளி செல்லாக் குழந்தைகள் தொடர்பாக நடந்தவை அனைத்து நிகழ்வுகளை தொகுத்தல், ஆராய்தல் மற்றும் கண்டறிதல் வேண்டும்.

**மே 2023:**

- அடுத்த ஆண்டிற்க்கான திட்டங்களை வகுத்தல், இந்த ஆண்டிற்க்கான ஒட்டுமொத்த தரவுகளை ஆராய்தல் வேண்டும்,

**பங்குதாரர்களின் பொறுப்புகள்**

| பங்குதாரர் | பங்கும் பொறுப்புகளும் |
|---|---|
| **மாநில EMIS குழு** | • EMIS - தளத்தில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள்<br>  ◦ ஒரு வாரத்தில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை என்றால், அம்மாணவர்கள் குறித்த விவரங்களை தலைமை ஆசிரியருக்கு தெரிவித்து அவர்கள் அதில் தங்கள் குறிப்புகளை இணைக்க வழிவகுத்தல்.<br>  ◦ இரண்டு வாரத்தில் ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை என்றால், அம்மாணவர்கள் குறித்த விவரங்களைவட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநரின் EMIS தளத்தில் காண்பித்தல்.<br>  ◦ மூன்று வாரத்தில் ஒன்பது அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை என்றால், அம்மாணவர்கள் குறித்த விவரங்களைமாவட்ட ஒருங்கிணைப்பாளர்களின் EMIS தளத்தில் காண்பித்தல்.<br>• "பள்ளியில் சேர்க்கப்பட வேண்டிய மாணவர்கள்" பட்டியலை, இடைநிற்றலுக்கான 38 காரணங்களின் அடிப்படையில் இரு பிரிவுகளாக உருவாக்குதல். (பொதுத் தரவுத் தளத்திலிருந்து அடையாளம் காணப்பட்ட மாணவர்கள் மற்றும் இது வரையில் பள்ளியில் சேர்க்கப்படாத மாணவர்கள்)<br>• பள்ளியில் சேர்க்கத் தேவையில்லாத மாணவர்களை கீழ்க்கண்ட காரணங்களின் அடிப்படையில் அடையாளம் கண்டு பொதுத் தரவு தளத்திலிருக்கும் தகவல்களை சரிபார்த்து துல்லியமாக்குதல் ஒரு |

| | |
|---|---|
| | முறைக்கு மேல் சேர்க்கைப் பதிவு, மாணவர் ஒரு வேளை மரணமடைந்திருந்தால், பிற மாநிலங்கள், மாவட்டங்கள் மற்றும் நாடுகளுக்கு குடிபெயர்ந்துவிட்ட மாணவர்கள் (பள்ளி மேலாண்மைக் குழுவால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்), தொழிற்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் (அது சார்ந்த துறைகளால் உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும்), தேர்ச்சி பெறுவதற்கான பயிற்சி நிறுவனங்களில் (டுட்டோரியல்) இணைந்து பயின்று வரும் மாணவர்கள் (அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும்).<br>• பள்ளியில் சேர்க்கத் தேவையில்லா மாணவர்கள் என்று குறிக்கப்பட்ட மாணவர்கள் குறித்த விவரங்களை பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து உறுதிப்படுத்துவதற்கான தனியான மென்பொருள் கட்டமைப்பை உருவாக்குதல்.<br>• அனைத்து தொழிற்பயிற்சி நிறுவனங்கள் (பாலிடெக்னிக், ஐடிஐ), தேர்வு தேர்ச்சி பயிற்சி நிறுவனங்கள் (டுட்டோரியல்) ஆகியவற்றை முகவரியுடன் தேர்ந்தெடுக்கக் கூடிய பட்டியலாக அளிக்க வேண்டும். |
| **OoSC மாநிலக் குழு** | • அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (சிறப்புப் பயிற்சி) மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு (EMIS) வாரத்தில் ஒரு முறை மாலை 3.00 மணி முதல் 4.00 மணி வரை இணை இயக்குநர்-III அவர்களால் மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.<br>• கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள் மாநில திட்ட இயக்குநரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br>• 5 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் மற்றும் அடுத்த வகுப்புகளுக்குச் செல்லும் குழந்தைகள் (5, 8, 10 முடித்தவர்கள்) ஆகியோரை பள்ளியில் சேர்ப்பதை ஜூலை மாதம் வரையில் இந்த மீளாய்வுக் கூட்டங்களின் முக்கிய நோக்கமாக இருத்தல் வேண்டும்.<br>• ஆகஸ்டு- செப்டம்பர் மாதத்திலிருந்து கள ஆய்வு தொடங்கி நடத்தப்பட்டு, "பள்ளியில் சேர்க்கப்பட வேண்டிய மாணவர்கள்" பட்டியலில் குறிக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் பள்ளியில் சேர்ப்பது குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |
| **OoSC மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் IE மாவட்ட ஒருங்கிணைப்பாளர்** | • பொதுத் தரவுத் தளத்திலிருந்து உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் மாணவர்களின் வெவ்வேறு பிரிவுகளைக் தினமும் கண்காணித்தல் வேண்டும்.<br>• மூன்று வாரத்தில் ஒன்பது அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் மாணவர்கள் பள்ளக்கு வரவில்லை எனில், EMIS தளத்தில் அம்மாணவர்களின் விவரப்பட்டியலை கண்டு தக்க நடவடிக்கை |

| | |
|---|---|
| | எடுக்க வேண்டும்.<br>• முதன்மைக் கல்வி அலுவலரின் தலைமையில் மாவட்ட வாரியான மீளாய்வுகளை நடத்துதல் மற்றும் மாவட்டத்தில் உள்ள வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்/ வட்டாரக் கல்வி அலுவலர்/ மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் தொகுதி ஒருங்கிணைப்பாளர்களுடன் இணைந்து பணியாற்றுதல்<br>• மாணவர்களை மீண்டும் பள்ளிகளில் சேர்ப்பதில் மாநிலத் தலைமையின் உத்தியைப் பின்பற்றி, மாவட்டத்திற்குள் அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் செயல்பாடுத்துதல் வேண்டும்.<br>• பள்ளி செல்லாத/இடை நின்ற மாணவர்கள் குறித்த அறிக்கைகளை கவனமாகக் கையாளவும், ஒவ்வொரு விவரமும் துல்லியமாக இருப்பதையும், கணக்கெடுப்பு செயல்பாடு அனைத்து மாணவர்களை சென்றடைவதையும் கவனமாக உறுதிப்படுத்த வேண்டும்.<br>• மாநில அளவிலான கூட்டத்தில் கலந்து கொண்டு, நடவடிக்கைகளை தானாக முன்வந்து செயல்படுத்த வேண்டும். |
| **மாவட்ட EMIS ஒருங்கிணைப்பாளர்** | • மாவட்ட பொதுத் தரவு தளத்தைக் குறித்து விரிவான அறிக்கைகளை உருவாக்கி, பள்ளியில் சேர்க்கப்பட வேண்டிய மாணவர்களை கண்டறிய மாவட்டக் குழுவுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். OoSc பகுப்பாய்வு அறிக்கை (Analytical reports) முதன்மைக் கல்வி அலுவலருக்கு சமர்பிக்க வேண்டும்.<br>• ஒவ்வொரு மாதமும் பொதுத் தரவு தளத்தில் சேர்க்கப்படும் இடைநிற்கும் மாணவர்களின் பட்டியலைக் கண்டறிய மாநில EMIS குழுவுடன் இணைந்து அறிக்கையினை பதிவிறக்கம் செய்து, தேவையான தகுந்த நடவடிக்கைக்காக முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிக்கை தர வேண்டும்<br>• ஒரு முறைக்கு மேல் உள்ளீடு செய்யப்பட்ட மாணவர் விவரங்கள், மரணமடைந்த மாணவர்கள், 12ஆம் வகுப்பு முடித்த மற்றும் அதிக வயதுடைய மாணவர்கள்ஆகிய விவரங்களை பொது தரவுத் தளத்திலிருந்து நீக்க, மாநில EMIS குழுவுடன் இணைந்து பணியாற்ற வேண்டும்.<br>• மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 100% வருகைப் பதிவு குறிக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்து, வருகைப் பதிவை குறிக்கத் தவறிய பள்ளிகளை உன்னிப்பாகக் கண்காணிக்கவும் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br>• வருகைப் பதிவு குறிப்பதில் சீரற்ற பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுடன் தொடர்ந்து சந்திப்புகளை நடத்த வேண்டும். |

| | |
|---|---|
| | • மாநில அளவிலான கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுதல் வேண்டும். |
| **மாவட்ட பள்ளி மேலாண்மைக் குழு ஒருங்கிணைப்பாளர்** | • சீரான கால இடைவெளியில் கூட்டங்களை நடத்துவதன் மூலமும், மாநிலக் குழுவின் செயல்பாடுகளையும் முடிவுகளையும் பகிர்வதன் மூலமும் பள்ளியில் சேராத/ இடைநின்ற மாணவர்களைக் கண்டறிந்து சரியான முறையில் நடவடிக்கைகள் எடுப்பதற்கு துணை நிற்க தாமாக முயற்சி எடுத்து மாவட்டத்தில் உள்ள பள்ளி நிர்வாக் குழுக்களை ஈடுபடுத்தல் வேண்டும். |
| **உதவித் திட்ட அலுவலர், உதவி மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்** | • பொது தரவுத் தளத்தில் உள்ள மாணவர்களை கண்காணித்து தரவுகளின் அடிப்படையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.<br>• மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள், தலைமை ஆசிரியர்கள் ஆகியோருடன் மாவட்ட அளவிலான கூட்டங்களை நடத்தி மாணவர்களை மீண்டும் பள்ளியில் சேர்ப்பதற்கான செயல்பாடுகளை திட்டமிட வேண்டும். |
| **வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள்** | • வீடு வீடாகச் சென்று நடத்தப்படும் கணக்கெடுப்புகளிலும், அதைத் தொடர்ந்து கள அளவிலான நடவடிக்கைகளிலும், தரவுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட உத்திகளை பின்பற்றவும் முக்கியப் பங்குதாரராகத் தலைமை வகிக்கவேண்டும்.<br>• வழங்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள தங்கள் வட்டாரத்துக்குள் உள்ள ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களை தயாரிக்க வேண்டும்.<br>• கைப்பேசி செயலியின் உட்கூறுகள் மூலம் வழங்கப்பட்ட தரவின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையை சரிபார்க்கவேண்டும்<br>• இரண்டு வாரத்தில் ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை எனில், EMIS அம்மாணவர்களின் விவரப்பட்டியலை கண்டு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.<br>• பள்ளி மேலாண்மைக்குழுக்கள் கண்டறிப்பட்ட மாணவர்களின் விவரங்களை முழுமையாக சரிப்பார்த்து உறுதி செய்த பின்னர் பள்ளியில் ஏற்கனவே சேர்க்கப்பட்ட மாணவர்கள் அல்லது இதுவரை பள்ளியில் சேர்க்கப்படாதவர்கள் என வகைப்படுத்த வேண்டும். |
| **தலைமையாசிரியர்** | • வீடு வீடாகச் சென்று நடத்தப்படும் கணக்கெடுப்புகளிலும், அதைத் தொடர்ந்து கள அளவிலான நடவடிக்கைகளிலும், தரவுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட உத்திகளை பின்பற்றவும் முக்கியப் பங்கேற்பாளர்களாக தலைமை வகிக்கவேண்டும்.<br>• கைப்பேசி செயலியின் உட்கூறுகள் மூலம் வழங்கப்பட்ட தகவலின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையை சரிபார்க்கவேண்டும் |

| | |
|---|---|
| | • அடுத்த வகுப்பில் இணையும் மாணவர்களின் (5, 8, 10 ஆம் வகுப்பு முடித்தவர்கள்) இருப்பை உறுதிபடுத்த வேண்டும்.<br>• ஒரு வாரத்தில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் மாணவர்கள் பள்ளி வரவில்லை எனில், EMIS அம்மாணவர்களின் விவரப்பட்டியலைக் கண்டு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.<br>• நான்கு வாரத்திற்கு பிறகு இடைநிற்றல் வாய்ப்புள்ள மாணவர்கள் என கருத்தப்படுவர்களை பொதுத் தரவு தளப் பட்டியலில் தகுந்த காரணத்தை குறிப்பிட்டு சேர்க்க வேண்டும். |
| **ஆசிரியர்கள்** | • தங்கள் வகுப்புகளில் வருகைப் பதிவை 100% குறிப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.<br>• வீடு வீடாகக் கணக்கெடுப்பு நடத்தி மாணவர்கள் இடைநின்ற காரணத்தைத் துல்லியமாகக் குறிக்க வேண்டும்.<br>• வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களின் நடவடிக்கை முயற்சிகளை ஒருங்கிணைத்துத் துணை நிற்க வேண்டும். |
| **பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள்** | • பிற மாவட்டங்கள், மாநிலங்கள், நாடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ள மாணவர் விவரங்களை முறையாக விசாரணை செய்து உறுதிப்படுத்த வேண்டும்.<br>• குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற மிக சிக்கலான காரணங்களுக்காக இடைநின்ற மாணவர்களுக்கான தலையீட்டு முயற்சிகள் துணை நிற்க வேண்டும்.<br>• பொதுத் தேர்வுக்குச் செல்ல உள்ள மாணவர்களில், நீண்ட நாட்கள் விடுப்பு எடுத்துள்ளவர்கள் மீது குறிப்பான கவனம் செலுத்த வேண்டும்.<br>• 5 வயதிற்கு மேற்பட்ட அனைத்துக் குழந்தைகளும் தங்கள் குடியிருப்புக்கு அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்கப்பட்டதை உறுதி செய்ய வேண்டும்.<br>• தங்கள் குடியிருப்பு பகுதிகளில் ஏதேனும் பள்ளி வயது குழந்தைகள் பள்ளிக்கு செல்லவில்லை என கண்டறிந்தால், பள்ளி மேலாண்மைக்குழு கைப்பேசி செயலில் அம்மாணவர்களின் விவரங்களை பதிவு செய்ய வேண்டும். |
| **இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள்** | • குழந்தைகளை மீண்டும் பள்ளியில் சேர்ப்பதற்கு மற்றும் தொடர்ந்து பள்ளி செல்லுவதற்கு மாவட்ட அளவிலான நடவடிக்கைகளுக்கு துணை நிற்க வேண்டும். |
| **இயக்குநர், அரசுத் தேர்வுகள் இயக்ககம்** | • அனைத்து தேர்ச்சி பயிற்சி நிறுவனங்களைப் பற்றிய விவரங்களையும் அரசு தேர்வுகள் இயக்ககம் சேகரித்து EMIS செயலியுடன் இணைக்க வேண்டும். |

| | |
|---|---|
| | • தேர்வுக்கான விண்ணப்பப் படிவத்தின் ஒரு பகுதியாக தேர்ச்சிப் பயிற்சி நிறுவனங்களின் விவரங்களையும், அவ்வாறு பயிலும் மாணவர்களின் EMIS விவரங்களையும் சேகரிக்க வேண்டும்.<br>• பள்ளியில் சேராத/இடைநின்ற மாணவர்களை கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளுக்குத் துணையாக, தேர்வுக்கு தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்துள்ள அனைத்து தனித் தேர்வாளர்களின் விவரங்களையும் பகிர வேண்டும். |
| **தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் – தகவல் தொழில்நுட்பப் பிரிவு** | • மாநிலமெங்கும் தொழிற்பயிற்சிக் கல்லூரிகளில் (பாலிடெக்னிக்) சேர்ந்துள்ள மாணவர்களின் EMIS அடையாள எண்களை சேகரித்து பள்ளிக் கல்வித் துறையிடம் அளிக்க வேண்டும். |
| **வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரகம் – தகவல் தொழில்நுட்பப் பிரிவு** | • மாநிலமெங்கும் ஐடிஐ நிறுவனங்கள் மற்றும் தொழிற்துறை கல்வி நிறுவனங்களில் (Industrial Schools) சேர்ந்துள்ள மாணவர்களின் EMIS எண்களை சேகரித்து பள்ளிக் கல்வித் துறையிடம் அளிக்க வேண்டும். |
| **மாவட்ட ஆட்சியர்கள்** | • மாவட்ட ஆட்சியர்களுக்கான முகப்பு பக்கத்தில் "பள்ளியில் சேர்க்கப்பட வேண்டிய மாணவர்கள்" பட்டியலைப் பார்த்து, பிற துறைகளுடன் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br>• பள்ளியில் சேராத/இடை நின்ற மாணவர்களை கண்டறிந்து இணைப்பதற்கான மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் தலைமை கல்வி அலுவலர்கள் ஆகியோருடன் மீளாய்வுக் கூட்டங்களை நடத்த வேண்டும். |

முதன்மை கல்வி அலுவலர்கள் அனைவரும் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை கண்டிப்பாக பின்பற்றி, பள்ளியில் சேராத/இடை நின்ற மாணவர்களே இல்லாத நிலையை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுத்து தங்கள் மாவட்டங்களில் 100% பள்ளிச் சேர்க்கையை உறுதிப்படுத்த வேண்டும்.

25/7/2022

**மாநில திட்ட இயக்குநர்**

## இணைப்பு - 1

| குறியீட்டு எண் | இடை நிற்றலுக்கான காரணம் | இடைநிற்றல் - தொகுதியின் பெயர் | இடை நிற்றல் – பிரிவு | தொடர்புடைய துறை | செயல் திட்டம் |
|---|---|---|---|---|---|
| 1 | பள்ளிக்கு வருவதற்கு ஆர்வமின்மை | பள்ளியில் ஊக்கமளிக்கும் சூழலின்மை | பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும் | பள்ளிக் கல்வித் துறை | அக்குழந்தைக்கு ஆர்வமூட்டும் வகையிலும் பங்கேற்கும் வகையிலும் இருக்கக் கூடிய ஒரு கற்றல் வழிமுறையை உருவாக்குதல். |
| 2 | வழிகாட்டல் போதாமை | பள்ளியில் ஊக்கமளிக்கும் சூழலின்மை | பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும் | பள்ளிக் கல்வித் துறை | அக்குழந்தைக்கு ஆர்வமூட்டும் வகையிலும் பங்கேற்கும் வகையிலும் இருக்கக் கூடிய ஒரு கற்றல் வழிமுறையை உருவாக்குதல் மற்றும் முறையான ஆலோசனைகளை வழங்குதல். |
| 3 | வகுப்பறையில் பங்கேற்பதில் சிக்கல் | பள்ளியில் ஊக்கமளிக்கும் சூழலின்மை | பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும் | பள்ளிக் கல்வித் துறை | கற்றலில் குழந்தை எதிர்கொள்ளும் சிக்கலின் தன்மையை கண்டறிந்து தேவையான உதவியை அளித்தல். |
| 4 | உடன் பிறந்தவர்களை பார்த்துக் கொள்ள வேண்டிய நிலை | பெரியவர்களின் துணையற்ற குழந்தைகள் | பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும் | பள்ளிக் கல்வித் துறை | (அ) சமூக மக்களுக்கும் பெற்றோருக்கும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தி குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப ஊக்கப்படுத்துதல்.<br>(ஆ) மாணவர்களுக்குத் தேவையான உளவியல் ஆலோசனை வழங்குதல்.<br>(இ) பொருத்தமான உண்டு உறைவிடப் பள்ளிகளுடன் தொடர்பினை ஏற்படுத்துதல். |

| குறியீட்டு எண் | இடை நிற்றலுக்கான காரணம் | இடைநிற்றல் - தொகுதியின் பெயர் | இடை நிற்றல் - பிரிவு | தொடர்புடைய துறை | செயல் திட்டம் |
|---|---|---|---|---|---|
